# பரிசில் ‘மாபெரும் தமிழ் மென்பொருள் கண்காட்சிகள்’

இணையத்தில் உலக அளவில் தமிழ்மொழி வளர்ச்சி அனைவரும் அறிந்த விஷயம். இன்றைக்கு உள்ள உயர் கணினி தொழல்நுட்பத்தில் தமிழில் பயன்படுத்தப்படும் மென்பொருள்கள் கண்காட்சி முதன் முறையாக பிரான்ஸ் தலைநகர் பரீஸ் நகரில் எதிர்வரும் ஒக்டோபர் 31, நவம்பர் 1 சனி, ஞாயிறு தேதிகளில் ‘மாபெரும் தமிழ் மென்பொருள் கண்காட்சிகள்’ நடைபெறுகிறது.

பரீஸ் லாச்சப்பல் ANT Hall ல் இரண்டு நாட்களும் சிறப்பாக நடைபெற உள்ள இந்த மென்பொருள் காட்சிகளில் தமிழ்பேசும் மக்களுக்கும், அவர்களின் குழந்தைகளுக்கும் தேவையான தமிழ் மென்பொருள்கள் பல கண்காட்சிக்கும், விற்பனைக்கும் வைக்கப்பட உள்ளது.

தமிழ் நூல்கள், தமிழ் கிளிப் ஆர்ட்ஸ் CDக்கள், தமிழ் கற்பிக்கும் DVD க்கும், குழந்தை பாடல்கள், விளம்பர நிறுவனங்களுக்குத் தேவையான அழகிய தமிழ் எழுத்துருக்கள் என்று நூற்றுக்கும் அதிகமான புதிய தமிழ் மென்பொருள்கள் விற்பனைக்கு வைக்கப்பட உள்ளன. இந்திய விலையில் - குறைந்த செலவில் - நேரடியாக இந்த மென்பொருள்களை DVDகள் இரண்டு நாள் கண்காட்சியில் வாங்கி தமிழ் மக்கள் பயனடையலாம். அனுமதி இலவசம். இந்தக் கண்காட்சியை சென்னை, கணினித்தமிழ்ச் சங்கம் ஒழுங்கு செய்து நடத்துகிறது. அனைவரும் வருகைதந்து கண்காட்சியை சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

துவக்க விழா எதிர்வரும் சனிக்கிழமை ஒக்டோபர் 31ம் திகதி காலை 11மணிக்கு ஆரம்பம்.

இந்நிகழ்வுக்கு சிறப்பு விருந்தினர்களாக

**திரு.பி.பாலசுந்தரம்**
(தலைவர், தமிழச் சங்கங்களின் கூட்டமைப்பு)

**திரு.எஸ்.மணியம்** (சிங்கப்பூர்)

**திரு.ஜீன்செவ்விலாட்** (சி.என்.ஆர்.எஸ், பரிஸ் பல்கலைக்கழகம்)

**அன்டோ பீட்டர்** (தலைவர், கணித்தமிழ்ச்சங்கம்)

**மேலும் விபரங்களுக்கு: 06 2916 64 12**